**கவனிக்க** .- *04.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1832 - 2013 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2013.10.11**

*1832 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 176 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |

**கவனிக்க.**- *இவ்வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2014 ஆம் ஆண்டிற்கான கொழும்பு மாவட்ட யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## றோயல் புண்ணியமைப்பு மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹஸன் அலி, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் "றோயல் புண்ணியமைப்பு மன்றம் கீழ் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) அநாதை இல்லம், முதியோர் இல்லம் அமைத்தல், நடாத்திச் செல்லுதல் மற்றும் சமூக நலன்புரி நிலையம் அமைத்தலும் ;

(2) ஆதரவற்ற மற்றும் ஏழ்மையான மக்களுக்கு சக்கர நாற்காலி, அக்குள் தாங்கி மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்குதலும் ;

(3) வீடற்ற மக்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல் மற்றும் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய முடியாதவர்களுக்கு உதவிகளை வழங்குதலும் ;

பிறவும்.

ஹஸன் அலி,
பாராளுமன்ற உறுப்பினர்.

10-179

---

## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

அதன் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில் (கொழும்பில் நடைபெறும்) ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

வேவல்தெனிய, கண்டி வீதி, 102 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள Vendol Media Network (Private) Limited (PV 80450) இன் விடயத்திலும் ;

வழக்கில் : HC (Civil) 23/2013/(CO)
தன்மை : ஒடுக்குதல்

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் நியதிகளின்கீழும் அவற்றின் படியும் நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பத்தின் விடயத்திலும் ;

யூனியன் ரெசிடன்சீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
இல. 200, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
................. மனுதாரர்.

அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று 2013, மே 31 ஆந் நாளன்று, கொழும்பு 02, யூனியன் பிளேஸ், 200 ஆம் இலக்கத்திலுள்ள யூனியன் ரெசிடன்சீஸ் (பிரைவேட்) லிமிட்டெட் இனால் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்ட மனு 2013, ஒற்றோபர் 04 ஆந் நாளன்று நீதிமன்றத்தின் முன்னர் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப்படுகின்றதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது ; சொல்லப்பட்ட மனுவின் மீது கட்டளையாக்கப்படுவதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்பும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர், அந்நோக்கத்துக்காக, விசாரிக்கப்படும் நேரத்தில் நேரில் அல்லது அவரது சட்டத்தரணி மூலம் தோன்றலாம் ; மனுவின் பிரதியொன்று, தேவையாகவுள்ள சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு, அதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணக்கொடுப்பனவின் கீழே கையொப்பமிட்ட வரினால் வழங்கப்படும்.

கையொப்பமிடப்பட்டது ;

எவ்ஜே மற்றும் ஜீ டீ சேரம்,
மனுதாரரின் சட்டத்தரணிகள்,
இல. 216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு விசாரிக்கப்படுகையில் தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப்பற்றி எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எவ்ஜே மற்றும் ஜீ டீ சேரம் தாபனத்துக்குச் சேர்ப்பித்தல் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். ஆளின் பெயரையும் முகவரியையும், அல்லது குழுமமாயின், குழுமத்தின் பெயரையும் முகவரியையும் அறிவித்தலானது குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாளினால் அல்லது குழுமத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும் ; அத்துடன் 2013, ஒற்றோபர் 03 ஆந் நாளின் பிற்பகல் 1.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும், அல்லது அஞ்சலில் அனுப்பப்படின், அந்நேரத்துக்குப் பிந்தாமல் அவர் அதனைப் பெறும் வகையில் போதிய நேரகாலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

எவ்ஜே மற்றும் ஜீ டீ சேரம்,
மனுதாரரின் சட்டத்தரணிகள்.

10-367

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.